செ.வெ.எண்.39 நாள்: 13.12.2020

# தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மகளிர் திட்ட மேலாண்மை இயக்குநர் / தூத்துக்குடி மாவட்ட வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்த பார்வையாளர் திருமதி.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் தொடர்பாக அங்கிகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்கள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்ற ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மகளிர் திட்ட மேலாண்மை இயக்குநர் / தூத்துக்குடி மாவட்ட வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்த பார்வையாளர் திருமதி.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் தொடர்பாக அங்கிகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்கள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்ற ஆலோசனைக்கூட்டம் இன்று (13.12.2020) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர் திரு.ஜெயசீலன், இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.விஷ்ணுசந்திரன், இ.ஆ.ப., சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.பி.சண்முகநாதன் (ஸ்ரீவைகுண்டம்), திருமதி.கீதாஜீவன் (தூத்துக்குடி) மற்றும் அலுவலர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் மகளிர் திட்ட மேலாண்மை இயக்குநர் / தூத்துக்குடி மாவட்ட வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்த பார்வையாளர் திருமதி.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

இந்திய தேர்தல் ஆணையம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் பணிகளை செய்து வருகிறது. இந்த ஆண்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இப்பணிகள் தொடர்பான பார்வையிட்டு ஆய்வு செய்ய உள்ளேன். தூத்துக்குடி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம்களில் இதுவரை 57272 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. இதில் விண்ணப்ப படிவம் 6 மட்டும் 40415 பெறப்பட்டுள்ளது. இன்றும் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது. பெறப்படும் விண்ணப்பங்களின் மீது துரித நடவடிக்கை மேற்கொண்டு இறுதி பட்டியல் தயார் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர் உள்ளதா என்பதை அதிக வாக்காளர்கள் பார்க்காமல் உள்ளனர். தேர்தலின்போது மட்டுமே தங்கள் பெயர் உள்ளதா என பார்க்கும் நிலை உள்ளது. தற்போது வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலை வாக்காளர்கள் அனைவரும் தங்கள் பெயர் உள்ளதா

என்பதை பார்க்க வேண்டும். தூத்துக்குடியில் இன்று நடைபெறும் ஆலோசனை கூட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்களே வந்து கலந்துகொண்டிருப்பது இந்த வாக்காளர் பட்டியல் தயார் செய்வதில் அரசியல் கட்சிகளின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. 1.1.2021 அன்று தகுதி நாளாக கொண்டு 18 வயது நிரம்பியவர்கள் அனைவரையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். தங்களுக்கு முழுமையாக 18 வயது நிரம்பவில்லை என இருப்பவர்களையும் விழிப்புணர்வு ஏற்படுத்தி சேர்க்க வேண்டும். இதில் மக்களுக்கு நெருக்கமாக உள்ள அரசியல் கட்சிகளை சேர்ந்த நீங்கள் அனைவரும் இந்த பணியில் பங்கேற்க வேண்டும். மொத்தமாக விண்ணப்பங்களை பெற்று வழங்க கூடாது. மொத்தமாக வரும் விண்ணப்பங்களை ஏற்க கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தகுதியான அனைவரும் வாக்காளர் பட்டியலில் அவசியம் சேர்க்க வேண்டும் என்பதே தேர்தல் ஆணையத்தின் நோக்கம் ஆகும். அரசியல் கட்சி பிரமுகர்களுக்கும் இதில் பொறுப்பு உள்ளது. வாக்காளர் பட்டியலில் இருந்து பெயரை நீக்கம் செய்வது மிக சரியான முறையில் செய்யபடுகிறதா என்பதை மறு ஆய்வும் செய்யப்பட்டு வருகிறது. முக்கிய பிரமுகர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பது கண்காணிக்கப்படுகிறது.

18 வயது பூர்த்தி அடைந்த அனைவரின் பெயரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். வாக்காளர் பட்டியலில் உள்ள அனைவரும் தங்கள் பெயர் உள்ளதா என பார்ப்பது உங்களின் உரிமை ஆகும். சிறப்பு முகாம் நடைபெறும் இடங்களில் வாக்குசாவடி நிலை அலுவலர்கள் நேரடியாக இருந்து விண்ணப்பங்களை பெறுவார்கள். தொடர்ந்து ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். புதிதாக சேர்ந்த வாக்காளர்கள் 5 நபர்களை அழைத்து அவர்களது நண்பர்களையும் சேர்ப்பதற்கு புதிய முயற்சியாக மாவட்ட ஆட்சித்தலைவர் நடவடிக்கை எடுத்ததை பாராட்டுகிறேன். மேலும் கல்லூரிகளில் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அதிக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

கூட்டத்தில் வருவாய் கோட்டாட்சியர்கள் திருமதி.விஜயா (கோவில்பட்டி), செல்வி.தனப்ரியா(திருச்செந்தூர்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அமுதா, உதவி ஆணையர் (கலால்) திரு.சுகுமார், அரசியல் கட்சி பிரமுகர்கள் திரு.சந்தானம்(அ.இ.அ.தி.மு.க.), திரு.ரவி(தி.மு.க.), திரு.ராஜா(சி.பி.ஐ.(எம்)), திரு.கிருபாகரன் (தி.மு.க.), திரு.விஜயன்(தே.மு.தி.க.), திரு.கனகராஜ் (பா.ஜ.க.), திரு.வரதராஜ் (என்.சி.பி), திரு.முரளிதரன் (காங்கிரஸ்), திரு.அசோக்குமார்(பி.எஸ்.பி.), மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.